<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு.**M.**நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 5/2022** நாள்: **28.10.2025** எ.ம.சா.**1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஷ்ணுபிரகாஷ் | தொழில் | : | Operation Executive, The New India Assurance Company Limited. |
| த/பெ | : | ரவிசந்திரன் | கிராமம் | : | உடுமலைபேட்டை |
| வயது | : | 31 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>முதல் விசாரணை -</u>

நான் இந்த மனுவில் 3ம் எதிர் மனுதாரர் நிறுவனத்தின் சாட்சி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ.1 – TN 94 A 9200 என்ற லாரியின் காப்பீடு சான்றிதழ் புகைப்பட நகல்

எ.ம.சா.ஆ.2 – 1வது எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் சமர்பித்த போலி ஓட்டுநர் உரிமம் நகல்

எ.ம.சா.ஆ.3 – பரிவாகன் செயலியில் எடுக்கப்பட்ட உண்மையான ஒட்டுநர் உரிமம் நகல்

எ.ம.சா.ஆ.4 – 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு 3வது எதிர்மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல்

எ.ம.சா.ஆ.5 – அதை பெற்றுக்கொள்ளாமல் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் திரும்பி வந்ததற்கான கவருடன் கூடிய கடிதம்

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

1வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஓட்டுநர் உரிமம் பொய்யானது என்று நிரூபிக்க புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்த மனுவில் இறந்துபோன நபர் எங்கள் காப்பீடு நிறுவனத்திற்கு 3வது மனிதர் என்றால் சரிதான். மனுவில் இறந்துபோன நபர் 3வது நபர் என்பதால் அவர் சார்பாக மனுதாரர்கள் கோருரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஓட்டுநர் உரிமத்தில் தகப்பனார் பெயர் மட்டும் தான் மாறியுள்ளதாக பரிவாகன் செயலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தகப்பனார் பெயர் மாறியுள்ள காரணத்தினால் 1வது எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் போலியானது என்று கூற முடியாது என்றால் சரியல்ல.

1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.28 15:01:41 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.